**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 581 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 8** |
| **Name** | : | **திரு. விருமாயி** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **04.12.2023**

எதிரிகள் 1,2 ஆஜர். எதிரிகள் 3 முதல் 6 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் S பெருமாள்கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். மற்ற எதிரிகளையும் தெரியும். சுமார் 7,8 வருடங்களுக்கு முன்பு புதுக்கோட்டை மஹாலில் வைத்து தங்கப்பாண்டியன் மகளை பசும்பொன் மகனுக்குக் கட்டிக் கொடுத்திருந்தார்கள். திருமணத்தின்போது 30 பவுன் நகை, 3 லட்சம் ரூபாய்க்கு சீர்வரிசைப் பொருட்கள் கொடுத்தார்கள். மாப்பிள்ளை வீடு கீழகுயில்குடியில் உள்ளது. கல்யாணம் முடிந்ததில் இருந்து மாப்பிள்ளை வீட்டில் தான் சிவப்பிரியாவும் விருமாண்டியும் ஒன்றாக இருந்தார்கள். சின்ன சின்ன சடவாக பிள்ளைகள் வந்தார்கள். போச்சுங்க. சிவப்பிரியா இறப்பதற்கு 2 வாரம் இருக்கும்போது சடவாக வந்து நகை கேட்டதாக வந்தாள். நாங்கள்,

அவரிடம் வளைகாப்பு போட்டபிறகு கொடுப்போம்மா போம்மா, என்று சொல்லி அனுப்பி வைத்தோம். சமுத்திரம், கலுவத்தேவர், பாண்டி, நான் மற்றும் இன்னொரு பிள்ளைகள் சேர்ந்து சிவப்பிரியாவிடம் அத்தை தான், வளைகாப்பு முடிந்து நகை கொடுப்போம் போம்மா என்று சொல்லி அனுப்பி வைத்தோம். தவணைக்குக் கொடுக்க வேண்டும் என்று மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரிடம் கேட்டதாக சொன்னார். நாங்கள் சமாதானம் சொல்லி அனுப்பி வைத்தோம். சிவப்பிரியா கீழகுயில்குடியில் வைத்து இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். நாங்கள் எல்லாரும் ஓடிப்போய் பார்த்தோம். இறந்துபோன சிவப்பிரியாவை அவரது தாயார் பாக்கியம் மடியில் போட்டு அழுதுகொண்டிருந்தார். பாக்கியத்திற்கு மயக்கம் வந்தது. இறந்து போன சிவப்பிரியாவை 4,5 ஆம்பிளைகள் சேர்ந்து சுடுகாட்டிற்குத் தூக்கிச் சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>

என் அப்பா பெயர் கலுவத்தேவர் என்றால் சரிதான். சிவப்பிரியா இறந்தபோது கலுவத்தேவர் அங்கு இருந்து எல்லா காரியங்களையும் பார்த்துக்கொண்டார் என்றால் கலுவத்தேவர் அங்கு இருந்தார். மற்ற விபரங்கள் எனக்குத் தெரியாது. எங்கள் ஊரில் பொருளாதாரம் சரியில்லை என்றால் வட்டிக்கு கொடுத்து வாங்குவது வழக்கம் என்றால் சரிதான். 1 வது எதிரியின் வீட்டில், போட்ட நகையை விட அதிகாமாகக் கொடு என்று கேட்கவில்லை என்றும் போட்டிருந்த நகையைக் கொடு வட்டிக்கு கொடுக்க வேண்டும் என்று தான் கேட்டார்கள் என்றால் சரிதான். சிவப்பிரியா இறந்து எத்தனை நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் என்னை போலிசார் விசாரிக்கவில்லை. போலிசார் விசாரணையின் போது, நான் சம்பவத்தை நேரடியாகப் பார்க்கவில்லை என்றும் கேள்விப்பட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றும் அதனால் தான் தற்போது போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

போலிசார் விசாரணையில், "சிவப்பிரியா இறந்த தகவல் கேள்விப்பட்டு போனேன் என்றும் நான் போவதற்குள் தூக்கிவிட்டார்கள்" என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சிவப்பிரியாவின் அம்மா, இறந்துபோன சிவப்பிரியாவை மடியில் போட்டு அழுதுகொண்டிருந்தார் என்ற விபரத்தை போலிசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் வேறு ஊரில் இருக்கிறேன். சிவப்பிரியாவின் அம்மாவை எந்த ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனார்கள் என்று எனக்குத் தெரியாது. சிவப்பிரியாவின் தாயார் எனக்கு என்ன உறவு என்றால் எதிரிகள் தான் எனக்கு உறவு. 2வது எதிரி சிவப்பிரியாவின் தகப்பானரின் அக்கா என்றால் சரிதான். சிவப்பிரியாவின் தகப்பனார் எனக்கு மாமன் உறவுமுறை ஆவார். கேள்விப்பட்ட சம்பவத்தை நேரில் பார்த்ததாக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை